# மெட்ரோ ரெயில் பயணிகளுக்கு சுற்றுலா அட்டை

## அனைத்து ரெயில் நிலையங்களில் கிடைக்கும்

சென்னை, பிப்.18-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பயணிகள் நலன் கருதி சுற்றுலா அட்டை கடந்த 2015-ம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது. இந்த அட்டையின் கட்டணம் நூறு ரூபாய், கூடுதலாக ரூ.50 அட்டைக்கு வசூலிக்கப்படுகிறது. பயணம் முடிந்து எந்த ரெயில் நிலையத்திலாவது அட்டையை திருப்பி வழங்கினால் ரூ.50 திருப்பி அளிக்கப்படும். இந்த அட்டை வைத்திருப்பவர்கள் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை ஒரு நாள் மட்டும் வரம்பில்லாமல் பயணிக்கலாம். ஒரு நபர் மட்டுமே பயன்படுத்த முடியும். வாங்கிய தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும். கூடுதல் நாட்கள் தேவைப்பட்டால் கார்டை ரீசார்ஜ் செய்து கொள்ளலாம். அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுண்ட்டர்களில் இருந்து பயணிகள் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.